# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இந்தியாவின் AI Impact Summit 2026 இல் உலகத் தலைவர்கள் பங்கேற்பு

2026 பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை புதுடில்லியில் AI Impact Summit 2026ஐ இந்தியா நடத்துகின்றது. மக்கள், பூமி மற்றும் முன்னேற்றம் என்ற மூன்று விடயங்களையும் மையப்பொருளாகக் கொண்டு இந்த மாநாடு வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், செயற்கை நுண்ணறிவில் ஒத்துழைப்புக்கான இந்தியாவின் அணுகுமுறையினை இது தீர்மானிக்கின்றது. உலகத்தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் உலகம் முழுவதுமுள்ள நிபுணர்கள் செயற்கை நுண்ணறிவின் முன்னேற்றம் குறித்து இங்கு கலந்துரையாடவுள்ளனர்.

2. பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்களது அழைப்பின் பேரில் கீழ்வரும் நாடுகளினதும் தலைவர்கள் இந்த AI Impact 2026 மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

1. **பூட்டான்** - அதி மேதகு பிரதமர் திரு ஷெரிங் டொப்கே,
2.**பொலிவியா** அதி மேதகு துணை ஜனாதிபதி திரு. எட்மண்ட் லாரா மொன்டானோ,
3. **பிரேசில்** -அதி மேதகு ஜனாதிபதி திரு. லூயிஸ் இனாசியோ லுலா த சில்வா,
4. **குரோஷியா** - அதி மேதகு பிரதமர் திரு. அன்ட்ரே பிளெங்கோவிச்
5. **எஸ்டோனியா** - அதி மேதகு ஜனாதிபதி திரு அலர் காரிஸ்,
6. **பின்லாந்து** - அதி மேதகு பிரதமர் திரு. பெட்டேரி ஓர்போ,
7. **பிரான்ஸ்** -அதி மேதகு ஜனாதிபதி திரு இம்மானுவேல் மக்ரோன்,
8. **கிரேக்கம்**-அதி மேதகு பிரதமர் திரு. கிரியாகோஸ் மிட்சொடாகிஸ்,
9. **கயானா** -அதி மேதகு. துணை ஜனாதிபதி டாக்டர் பரத் ஜக்தியோ,
10. **கஜகஸ்தான் –** அதிமேதகு பிரதமர் திரு ஒல்ஷாஸ் பெக்டனோ
**11.லிச்சென்ஸ்டீன்** – அதி மேதகு இளவரசர் அலோயிஸ் லிச்சென்ஸ்டைன்
12. **மொரிஷியஸ்** - அதி மேதகு பிரதமர் டாக்டர் நவின்சந்திர ராம்கூலம் GCSK, FRCP.
13. **சேர்பியா** - அதி மேதகு ஜனதிபதி திரு. அலெக்ஸாண்டர் வூசிச்
14. **ஸ்லோவாக்கியா** - அதி மேதகு ஜனாதிபதி திரு. பீட்டர் பிலிகிரினி,
15. **ஸ்பெயின்** - அதி மேதகு ஜனாதிபதி திரு. பெட்ரோ சஞ்செஸ் பெரெஸ்-கஸ்ரகொன்,
16. **இலங்கை** – அதி மேதகு ஜனாதிபதி திரு அநுர குமார திசாநாயக்க,
17. **சிஷெல்ஸ்** - அதி மேதகு. துணை ஜனாதிபதி திரு செபாஸ்டியான் பிள்ளை,
18. **சுவிட்சர்லாந்து** - அதி மேதகு ஜனாதிபதி திரு. கீ பார்மெலின்,
19. **நெதர்லாந்து** - அதி மேதகு பிரதமர் திரு. டிக் ஸ்கூப்
20. **ஐக்கிய அரபு இராச்சியம்** –அபுதாபியின் முடிக்குரிய இளவரசர் அதிமேதகு ஷேய்க் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான்.

3. இதற்கு மேலதிகமாக 45க்கும் அதிகமான நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள் மட்ட பேராளர்களும் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர். ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செயலாளர் நாயகம் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடல்களில் பங்கேற்கின்றனர்.

************

**கொழும்பு**
**14 பெப்ரவரி 2026**